**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.269/2021**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : முனியாண்டி | **Caste** | : |
| **Father's Name** | : சுப்பிரமணி | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : வத்தலகுண்டு | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **37/2026** |
| | | **Dated** | : **14.07.2026** |

**14.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு.முனியாண்டி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது வத்தலகுண்டு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.09.2020ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு ஈரோடு மாவட்டம், நஞ்சை கொளநல்லியைச்சேர்ந்த அருள்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலையக்குற்ற எண்.1005/2020 சட்டப்பிரிவுகள் 392 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

வழக்கின் புலன்விசாரணை அலுவலர் பணி உயர்வு பெற்று சென்றுவிட்டதால் அவரின் கையொப்பம், கையெழுத்து நன்கு பரிட்சயம் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் தெய்வம் அவர்கள் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள்குமார், சாந்தகுமார், கருப்ப சாமி முன்னிலையில் சம்பவ இடத்தைப்பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

பின்பு சாட்சிகள் அருள்குமார், மகேந்திரன், நாக அர்ஜீன், அம்பேத்கார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் 24.10.2020ம் தேதி மேற்படி காவல் நிலையத்திற்கு உட்பட்ட தொடர்புடைய எதிரிகளை விசாரிக்க அவர்கள் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்றத்தோடு தொடர்புடையதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தன்னிச்சையாக கொடுத்தார்கள். அதை சாட்சிகள் கார்த்திக், புவனேஷ்வரன் முன்னிலையில் பதிவுசெய்துள்ளார். மேலும் தாடிக்கொம்பு வழக்கில் பறித்து சென்ற 4 கிராம் தங்க காசு ஒன்றையும் TN 59 CD 1279 YEMAGA ஸ்கூட்டி மற்றும் கத்தி ஒன்றை ஆஜர் செய்யவே அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு வழக்குச்சொத்துகளை படிவம் 91 மூலம் தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்கள். காவல் ஆய்வாளர் தெய்வம் வழக்கின் எதிரிகளை சம்பிரதாய கைது செய்து கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் . பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த என்னையும் அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் லாவண்யா என்பவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 392 இதச வாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ. 5 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் , பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகவும் , அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆகவும் , படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை எதிரிகளிடம் இருந்து வழக்குச்சொத்துகளை கைப்பற்றவில்லை என்றாலும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.14 17:12:50 +0530

Judicial Magistrate No.II
Dindigul.